1973 மார்ச் 14]

இருக்கிருர்கள். அப்படியென்ருல், 24,800 பேர் வேலேவாய்ப்பின்றி இருப்பார்கள். 1973–74-இல் 6,300 பேருக்கு வேலே கொடுத்தாலும் மேற்கொண்டு 18,500 பேர் மிஞ்சக்கூடிய நிலேயில் இருப்பார்கள். அந்த வகையில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும், வேறுபல இடங்களிலும் நான்காண்டுகள், ஐந்தாண்டுகளாகப் பயிற்சி பெற்றவர்கள் வேலே இல்லாமலிருக்கிருர்கள். அவர்களுக்கு வேலே கிடைக்கச் செய்ய வேண்டிய முயற்சியை எடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டாண்டுகளாகக் கேரளாவில் மாணவர்களேச் சேர்ப்பதை அறவே நிறுத்திவிட்டார்கள். 1970–71-இல் ஆந்திராவில் மாணவர்களேச் சேர்ப்பதை நிறுத்தி விட்டார்கள். பயிற்சி பெற்றவர்கள் இருக்கும்போது அவர்களுக்கு வேலேவாய்ப்பு கொடுத்த பிறகுதான் தேவையை அனுசரித்து அவர்களுக்கு பயிற்சி இடங்களே ஏற்படுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறேம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் இன்று வேலே இல்லாமல் இருக்கிருர்கள். ஆதலால் அவர்களுடைய வயது வரம்பைச் சற்றுத் தள்ளிப்போட அரசாங்கம் ஆணே பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட குறிப்பிட்ட இடங்களில் ஓரளவு அவர்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தும் யோசனே அரசுக்கு இருக்கிறது. யார் யாருக்கு அப்படிப்பட்ட நிலேமையோ அவர்களேப்பற்றி மட்டும் கவனிக்கலாம். மொத்தமாக அப்படிப்பட்ட நிலேமைகளே ஏற்படுத்தாமல் எங்கே அப்படிப்பட்ட நிலேமைகள் இருக்கின்றனவோ அதைப் பரிசீலிக்கலாம் என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணேத் தலேவரவர்களே, இப்போது ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சி பூரணமாக இல்லே என்று சொல்லப்படுகிறது. அதனுல்தான் ஆசிரியர்கள் வேலேநிறுத்தம் போன்ற செயல்களில் ஈடுபடுகிருர்கள். ஆகவே, ஆசிரியர்களின் அந்தமாதிரியான செயல்களேத் தடுக்கின்ற வகையில் அவர்களுக்கு இன்னும் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவைகளே பயிற்சியின்போது போதிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அளிக்கப்படுகின்ற பயிற்சி பூரணமாக இருக்கிறதா இல்லேயா என்று சொல்ல முடியாது. பூரணமாக இருக்க வேண்டும் என்பதுதான் நமது எண்ணம். அதற்கான முயற்சிகளே மேற்கொண்டு வருகிறேம்.

திரு. த. சோணேயா : ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில் நிறையப்பேர் வேலேயில்லாமல் இருப்பதால் பயிற்சிப் பள்ளிகளே தற்காலிகமாக நிறுத்தியிருப்பதாகச் சொன்னுர்கள். அப்படியானுல் எவ்வளவு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு இன்னும் வேலே கொடுக்கப்படவில்லே ? இன்னும் எத்தனே ஆண்டுகளில் அவர்களுக்கு வேலே கொடுக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1968–69-ல் 269 பிரிவுகள் இருந்தன. ஒரு பிரிவுக்கு 40 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள். அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டது. 1969–70-ல் 227 பிரிவுகள் இருந்தன. 1970–71-ல் 197 பிரிவுகள் இருந்தன. 1971--72-ல் 162 பிரிவுகள் இருந்தன. சென்ற ஆண்டு முதலாண்டு மாணவர்களே சேர்ப்பதை நிறுத்திவிட்டு, 2-வது ஆண்டு மாணவர்களே வைத்து பயிற்சி